**செ.வெ. எண்: 811** **நாள்: 02.12.2017**

**இன்று (2.12.2017) சேலத்தில் ரூபாய் 26.77 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருவாக்கவுண்டனூர் மேம்பாலத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்து உரையாற்றியது**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற காலத்திலே சேலம் மாநகரம் மற்றும் பல்வேறு பகுதிகளில் வசிக்கின்ற கனரக வாகனங்கள், இருசக்கர வாகனங்கள், பொதுமக்கள் இவ்வழியாக செல்லும்பொழுது கடுமையான போக்குவரத்திற்கு உட்படுகின்றார்கள். ஆகவே, திருவாக்கவுண்டனூர் ரவுண்டாவிலே ஒரு மேம்பாலம் கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களுடைய கோரிக்கையை ஏற்று, உடனடியாக இங்கே உயர்மட்ட பாலம் ஒன்று கட்டித்தரப்படும் என்ற அறிவிப்பை தந்து இன்றையதினம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இறைவனால் எடுத்துக்கொள்ளப்பட்டாலும், மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டம் நம் கண் முன் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. இந்த மண்ணிலிருந்து மறைந்தாலும், நான் மக்கள் உள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருப்பேன் என்று இந்தப் பாலம் சொல்லிக் கொண்டிருக்கின்றது என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்தில், சேலம் மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் எந்தெந்த பகுதியில் போக்குவரத்து நெரிசல் இருக்கின்றதோ, போக்குவரத்து பிரச்சினை இருக்கின்றதோ அந்தப் பகுதிக்கெல்லாம் உயர்மட்ட பாலம், கீழ்மட்ட பாலம், சாலையை அகலப்படுத்துதல், சாலையை விரிவுபடுத்துதல், தரம் உயர்த்தல் போன்ற கோரிக்கையை நாம் வைத்தோம். அத்தனையையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றித் தந்து, சேலம் மாவட்டம், போக்குவரத்து நெரிசல் இல்லாத மாவட்டம் என்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். தமிழகத்தில் எத்தனையோ முதலமைச்சர்கள் தோன்றினாலும், நம்முடைய சேலம் மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்த ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான். இன்னும் விரைவாக நம்முடைய

AVR ரவுன்டானா அங்கு ஒரு உயர்மட்ட பாலம் குறுகிய காலத்தில் கட்டித் திறக்கப்பட இருக்கிறது. அதற்குப் பின்னர், சேலம் ஸ்டீல் பிளாண்ட் பிரிவு ரோடு, விரைவில் அடிக்கல் நாட்ட இருக்கிறோம். அந்த பாலம் முடித்துவிட்டால், இங்கேயிருந்து பெங்களூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சென்னை செல்கின்றவர்கள் எந்தவித போக்குவரத்து நெரிசலும் இல்லாமல் செல்லலாம். ஆகவே, கனரக வாகனம் செல்லுகின்றபொழுது, பேருந்துகள் உரிய நேரத்தில் செல்ல இயலவில்லை. எனவே, கார், பைக் போன்றவைகளெல்லாம் இந்த வழியாக செல்லமுடியாத சூழ்நிலை, காலையிலும், மாலையிலும், பள்ளிக்கு செல்பவர்கள், வேலைக்கு செல்பவர்கள் குறித்த நேரத்தில் செல்லமுடியாத சூழ்நிலை அங்கு இருந்தது. கிட்டத்தட்ட, ஒருசில காலகட்டத்தில், காலையிலும், மாலையிலும் அரை மணி நேரம் போக்குவரத்து நெரிசல் உண்டாகின்றது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைப்பதற்காக நமக்கு இந்த பாலத்தை தந்து சேலம் மாவட்ட மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். இறைவனாய் காட்சி அளிக்கின்ற அம்மா அவர்களுக்கு சேலம் மாவட்ட மக்களின் சார்பாக, எனது சார்பாக மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன். அதேபோல, சேலம் ஜங்ஷன் அருகில் கீழ்ப்பாலம் கட்டி திறக்கப்பட்டது. செவ்வாப்பேட்டை பக்கத்தில் ஒரு பாலம் கட்டும்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, விரைவாக முடிக்கப்பட்டு அதுவும் திறக்கப்படும். அதேபோல, ஐந்து ரோடிலிருந்து மிக நீளமான பாலம் தமிழ்நாட்டிலேயே இரண்டு அடுக்கு பாலம் என்று சொன்னால் அந்த பாலம்தான், அதை மாண்புமிகு அம்மா அவர்கள் நமக்கு அளித்து, சேலத்தில் இருக்கின்ற மக்கள் அத்தனைபேரும் ஐந்துரோடின் வழியாக செல்லவேண்டிய சூழ்நிலை இருப்பதாலே, போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள், உயர்மட்ட பாலம், இரண்டு அடுக்கு பாலம் அங்கே கட்டப்படும் என்ற அறிவிப்பை தந்து, பணி வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த பணி முடிந்தவுடன், அந்தப் பாலம் திறக்கப்பட்டு, எந்தவொரு நெரிசலும் இல்லாமல் வாகன ஓட்டிகள் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு கொடுக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, முள்ளுவாடி கேட் அந்த இரண்டு railway gate-லும் அடிக்கடி ரயில்

செல்கின்ற காரணத்தினாலே அந்த கேட் மூடப்படுகின்றன. இதன் காரணமாக அதிகமான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, முள்ளுவாரி கேட் பகுதியில் உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு அம்மா அவர்கள் அறிவித்து, அதற்குண்டான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நில எடுப்பு பணி முடிந்தவுடன் உயர்மட்ட பாலப்பணி துவங்கும். மணல்மேடு பகுதியிலும் உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள், அந்தப் பகுதியில் நில எடுப்பு பணி முடிந்தவுடன், அங்கேயும் உயர்மட்ட பாலம் கட்டப்படும். எனவே, சேலம் மாநகரத்திற்குட்பட்ட பகுதியில் எங்கெங்கெல்லாம் போக்குவரத்து நெரிசல் இருக்கின்றதோ, அந்தப் பகுதிக்கெல்லாம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உயர்மட்ட பாலம் அறிவித்து, விரைவாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை தெரிவித்து, முதல்கட்டமாக இந்த திருவாக்கவுண்டனூர் ரவுன்டானா அருகில் உயர்மட்டப் பாலத்தை அம்மா அவர்களின் அருளாசியோடு, இறைவனுடைய அருளாசியோடு இன்றைக்கு திறந்து வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்து, இந்த நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், முன்னாள் அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினா திரு செம்மலை அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினா் பன்னீர்செல்வம் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினா் திரு காமராஜ், திரு சுந்தரம் ஆகியோர்களுக்கும், சட்டப்பேரவை உறுப்பினா் திரு வெங்கடாசலம், திரு சக்திவேல், திரு வெற்றிவேல், திரு ராஜா, திருமதி பி மனோன்மணி திருமதி சித்ரா, திரு சின்னத்தம்பி அவர்களுக்கும், மத்திய, மாநில கூட்டுறவு வங்கித்தலைவா் திரு இளங்கோ அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த பொறியாளர்களுக்கும், பாலத்தை கட்டிய ஒப்பந்ததாரர்களுக்கும், அனைத்து முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், வருகை தந்துள்ள அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், பொதுமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**